**12.11.2024**

**O.S.No. 111/2001**

**வா.சா.1 : ரங்கநாதன்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

5) இந்நீதிமன்றத்தில் இதே சொத்து குறித்து மொத்தம் 3 வழக்குகள் உள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 301/2015 வேறு சொத்து சம்பந்தப்பட்டது. அசல் வழக்கு எண். 48/2005 மற்றும் 111/2001 ஒரே சொத்து சம்பந்தப்பட்டது. மேற்படி 2 வழக்குகளும் ஆத்தூர் அரசு மேல்நிலைபள்ளியின் முன் உள்ள சொத்து மற்றும் வீடு சம்மந்தப்பட்டது. அசல் வழக்கு எண். 301/2015 நிலுவையில் உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அதில் நான் தரப்பினர் அல்ல.

6) சாட்சியிடம் மீண்டும் கேட்ட போது 301/2015 நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதை நான் தாக்கல் செய்யவில்லை. சிவானந்தம் தான் தாக்கல் செய்தார். மேற்படி வழக்கில் உள்ள சொத்துகள் விவசாய நிலங்கள் என்றால் சரிதான். அவை இரண்டு கிராமம் ஆன தென்னங்குடிபாளையம் மற்றும் அப்பமசமுத்திரம் கிராமத்தில் உள்ளது.

7) அசல் வழக்கு எண்கள். 48/2005 மற்றும் 111/2001 என்ற இரண்டு வழக்குகளிலும் ஒரே சொத்து தான் என்றால் சரிதான். அ.எண். 111/2001ல் என் தாயார் தான செட்டில் மெண்ட் பத்திரத்தை ரத்து செய்தது செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 24.05.2001ல் 2 தான செட்டில் மெண்ட் பத்திரத்தையும்

என் தாயார் ரத்து செய்தார். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் தான செட்டில் மெண்ட் பத்திரத்தை ரத்து செய்தது செல்லாது என்று கோராமல் தான செட்டில் மெண்ட் பத்திரத்தின் படி எனக்கு பாத்தியம் உள்ளது என்று கோரியுள்ளேன் என்றால் ரத்து செய்தது செல்லாது என்று தான் கோரியுள்ளேன்.

8) தான செட்டில் மெண்ட் பத்திரத்தை ரத்து செய்தது செல்லாது என்று கோராததால் இந்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து மனையாக என் அம்மா பெயரில் வாங்கப்பட்டது. அந்த சொத்தில் வீடு கட்டுவதற்கு நரசிங்கபுரம் வீடு கட்டும் சங்கத்தில் என் தாயார், நான் , கோவிந்தன் , என் அப்பா ஆகியோர் சேர்ந்து கடன் பெற்றோம் என்றால் சரிதான். அந்த கடன் வாங்கி தான் வீடு கட்டப்பட்டது என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் நான்கு ஆண் பிள்ளைகள் என்றால் சரிதான்.

9) அவர்கள் தர்மலிங்கம், சுப்ரமணி, கோவிந்தன் மற்றும் ரங்கநாதன் ஆகியோர். தர்மலிங்கமும், சுப்ரமணியும் மூத்தவர்கள் என்றால் கோவிந்தனும் சேர்த்து தான் மூத்தவர்கள். தர்மலிங்கமும், சுப்ரமணியும் தற்போது உயிருடன் இல்லை. சிவானந்தம் என்பவர் தர்மலிங்கத்தின் மகன். என் தாயார் என் பெயரில் எழுதிய தான செட்டில் மெண்ட் பத்திரத்தை ரத்து செய்து சிவானந்தம் பெயரில் கிரைய பத்திரம் எழுதினார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தையும் என் தாயார் 27.07.2001ல் ரத்து செய்துவிட்டார் என்று சாட்சி சொல்கிறார்.

10) இந்த வழக்கில் என் தாயார் என்னுடன் மட்டும் தான் இருந்தார், கோவிந்தன் தனியாக நேரு நகரில் வசித்து வந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நேரு நகரில் யார் வசித்து வந்தார்கள் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. என் பெற்றோர்கள் இயற்கை எய்தி விட்டார்கள். வாரிசுகளில் இரண்டு ஆண் மக்கள் அவர்களின் வாரிசுகளை விட்டுவிட்டு இயற்கை எய்தி விட்டார்கள்.

11) என் அம்மா எழுதிய ரத்து பத்திரத்தில் எனக்கு சொத்தை கொடுக்க விரும்பாததாலும், சுவாதீனம் என்னிடமே இது வரை இருந்து வருவதாலும் மேற்படி தான செட்டில் மெண்ட் பத்திரத்தை ரத்து செய்கிறேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் சொல்லப்பட்டுள்ளது. தன்னுடைய விருப்பத்தின் பேரில் தான் ரத்து பத்திரம் எழுதி வைத்ததாக சொல்லியுள்ளார்.

12) வா.சா.ஆ.5, 6ல் தான செட்டில் மெண்ட் ரத்து பத்திரத்தில் என்னிடமே சொத்தின் சுவாதினம் இருந்து வருவதாலும், அன்னவஸ்த்திரம் தராததாலும் என்று எழுதப்பட்டுள்ளதாலும் எனக்கு எழுதி கொடுத்த தான செட்டில் மெண்ட் பத்திரத்தில் அவ்வாறு நிபந்தனைகள் ஏதுவும் இல்லை. ரத்து செய்யப்பட்ட பத்திரங்கள் பற்றிய விவரம் அவ்வாறு ரத்து செய்யப்பட்டு 1 மாதம் கழித்து தான் தெரியும். நேரடியாக தெரியாது. தெரிந்துவர் மூலமாக தகவல் தெரியவந்தது.

13) நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எந்த இடத்திலாவது என் பெயரில் சொத்துக்கள் மாற்றம் செய்யப்பட்டதற்கான ரசீதுகள் மற்றும் ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. என் பெற்றோருக்கு வேறு பெண் குழந்தைகள் இல்லை. நான் பாகம் பிரிவினை கோரியும் மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். (அ.எண். 95/2003). ஆவணங்கள் முழுவதும் ரத்தாகிவிட்டதால் சொத்துக்கள் முழுவதும் என் பெற்றோர் பெயரிலே இருந்து வருவதால் அந்த சொத்துகள் மேற்படி நான்கு ஆண்களுக்கு 4 சம பாகமாக பிரித்துக்கொள்ள எனக்கு சம்மதம் என்றால் இல்லை. எனக்கு செட்டில் மெண்ட் எழுதி வைத்துவிட்டார்கள்.

14) ஆத்தூர் அரசு மேல் நிலைபள்ளியின் எதிரில் அமைந்துள்ள சொத்து சாலையை ஒட்டி வடபுறம் அமைந்துள்ள சொத்து என்றால் சரிதான். அது மிக மதிப்பு உடைய சொத்து என்றால் சரிதான். அதனால் நான் அடைய வேண்டும் என்ற தீய எண்ணத்தில் அந்த சொத்துகளை பொறுத்து ஏற்பட்ட தான செட்டில் மெண்ட் ரத்து பத்திரத்தை செல்லாது என்று கேட்காததால் நான் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

15) தான செட்டில் மெண்ட் ரத்து பத்திரத்தை செல்லாது என்று கேட்க சட்டப்படி கால அவகாசம் இல்லாததால் அதை பொறுத்து எவ்வித பரிகாரமும் கோர இயலாது என்றால்

சரியல்ல. எனவே இவ்வழக்கு நிலைக்கதக்கது அல்ல, செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**9ம் பிரதிவாதி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Subordinate Judge, Attur.**